**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC), பொள்ளாச்சி**

2023 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23 ஆம் நாள் சனிக்கிழமை

**இ.ம.எண்.1617/2017 இன் அ.வ.எண்.277/2017**

பொள்ளாச்சி தாலூக்கா, வேட்டைகாரன்புதூர் அஞ்சல், அசோக் நகர், எண்.21R என்ற முகவரியில் வசிக்கும் சுமார் 75 வயதுடைய லேட்.K.பழனிசாமி கவுண்டர் மனைவி திருமதி.ரத்தினம்.

... மனுதாரர் / வாதி

/ எதிர் /

கோயம்புத்தூர், சிவில் ஏர்போர்ட் அஞ்சல், பத்மநாப நகர், எண்.16 என்ற முகவரியில் வசிக்கும் சுமார் 59 வயதுடைய லேட்.கிருஷ்ணசாமி கவுண்டர் மகன் திரு.சுவாமிநாதன்.

... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

நீதிமன்ற ஆணையரை நியமித்து தாலூக்கா நில அளவையர் உதவியுடன் மனுச்சொத்துக்களை பார்வையிட்டு, 29..08.1955 தேதியிட்ட 708/1955 பதிவு எண் கொண்ட பாகப்பத்திரத்தின்படி அளவை செய்து எல்லைகளை நிர்ணயம் செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 09.11.2017.

இம்மனுவானது கடந்த 05.09.2023 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.P.லதா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.R.ஹரிபிரசாத் அவர்கள் ஆஜராகியும், மனு மற்றும் எதிருரை சங்கதிகளின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

## இறுதி உத்தரவு

| | |
|---|---|
| 1. | முடிவில், வழக்கறிஞர் **திரு.G.கோபி MS.No.2521/2015** என்பவர் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்பட்டு மேற்படி நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்துக்களை 29..08.1955 தேதியிட்ட 708/1955 பதிவு எண் கொண்ட பாகப்பத்திரத்தின்படி தாலூக்கா நிலஅளவையர் உதவியுடன் இருதரப்பினருக்கும் அறிவிப்பு கொடுத்து அளவை செய்து எல்கைகளை நிர்ணயம் செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும், நீதிமன்ற ஆணையரின் ஊதியம் ரூ.8,000/- என நிர்ணயம் செய்யப்பட்டு மேற்படி, தொகையானது மனுதாரர் தரப்பில் நீதிமன்ற ஆணையருக்கு வரும் 03.10.2023 அன்றோ அல்லது அதற்கு முன்போ நேரடியாக செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை. |
| 2. | அழைக்க: 03.10.2023. |

## சொத்துவிபரம்

## A-SCHEDULE

கோயமுத்தூர் ரிடிடு ஆனைமலை ரிசப்டிடு பொள்ளாச்சி தாலூக்கா, வேட்டைக்காரன்புதூர் கிராமபுலத்தில் க.ச.789A. பு.ஏ.13.88 க்கு தரம் ரூபாய் 11.4.0. இதில் கிழகோட்டில் தென்வடல் நீளியாய் ராமசாமிபிள்ளை பங்கு பூமிக்கும் கிழக்கு க.ச.789B காலைக்கும் வடக்கு க.ச.790, 791 நெ.காலைகளுக்கும் தெற்கு, இதன் மத்தியில் பு.ஏ.4.80 க்கு தரம் ரூபாய் 3.14.0 (Doc.No.708/1955)

## B-SCHEDULE

கோயமுத்தூர் ரிடிடு ஆனைமலை ரிசப்டிடு பொள்ளாச்சி தாலூக்கா, வேட்டைக்காரன்புதூர் கிராமபுலத்தில் க.ச.789A பு.ஏ.13.88 க்கு தரம் ரூபாய் 11.4.0. இதில் மத்தியில் ராமசாமிபிள்ளை பழனியம்மாளுக்கு கிரையத்திற்கு

கொடுத்த பாகபூமிக்கும் கிழக்கு A ஷெட்யூல் பாக பூமிக்கும் மேற்கு க.ச.792, 791 நெ.காலைகளுக்கும் தெற்கு க.ச.789B காலைக்கும் வடக்கு. இதன் மத்தியில் தென்வடல் நீளியாக பு.ஏ.2.30 க்கு தரம் ரூ.1.14.0. C ஷெட்யூல் பாகஸ்தரின் வண்டித்தடம் நீங்கலாக பு.ஏ.2.20 மட்டுமே. (Doc.No.708/1955)

**C–SCHEDULE**

கோயமுத்தூர் ரிடிடு ஆனைமலை சப்ரிடிடு பொள்ளாச்சி தாலூக்கா, வேட்டைக்காரன்புதூர் கிராமபுலத்தில் க.ச.789A பு.ஏ.13.88 க்கு தரம் ரூபாய் 11.4.0. இதில் பொதுவில் எனக்கு பாத்தியப்பட்ட புஞ்சை ஏக்கர் 2.31 1/3 க்கு தரம் ரூ.1.4.0 உள்ள பூமியும் இதில் இருக்கும் சகலவிதமான விருட்ஷங்களும். (Doc.No.289/1955)

இவ்வுத்தரவு 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23 ஆம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(ஒப்பம்)/– N. பாரதிராஜன்**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
பொள்ளாச்சி.

---------------------------------------------------------

**<u>இறுதி உத்தரவு</u>**

இ.ம.எண்.1617/2017 இன் அ.வ.எண்.277/2017

நாள் : 23.09.2023

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

-------------------------------------------------------